பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
06 08 2026 THURSDAY 6.30 PM

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) தேசிய உயிரி எரிசக்தி கோவர்தன் திட்டத்திற்கு 23 ஆயிரத்து 731 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

2) வரிவிதிப்பு சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.

3) தமிழகத்தில் நிதி ஆதாரத்தை சரி செய்தபின் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

4) கோவை, தேனி, நெல்லை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5) கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ண பிரசாத் – பிரித்வி கிருஷ்ணமூர்த்தி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

தேசிய உயிரி எரிசக்தி கோவர்தன் திட்டத்திற்கு 23 ஆயிரத்து 731 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அமைச்சரவைக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், இந்த திட்டத்தின்மூலம் ஒன்றரை லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.
நாட்டின் தூய எரிசக்தி பயணத்தில் கோவர்தன் திட்டம் முக்கிய பங்காற்றுவதாக அவர் கூறினார்.
நடப்பு நிதியாண்டிலிருந்து, வரும் 2035-36-ஆம் ஆண்டு வரை இந்த திட்டத்தை செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
வேளாண் கழிவு, சாணம், கரும்பு ஆலை கழிவு, மக்கும் குப்பை உள்ளிட்ட உயிரி வளங்களை பயன்படுத்தி, எரிசக்தி உற்பத்தி செய்ய இந்த திட்டம் வழிவகை செய்ய உள்ளது.
<<<<<<<>>>>>>
வரிவிதிப்பு சட்டத்திருத்த மசோதா மக்களவையில் இன்று நிறைவேறியது.
மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று முன்தினம் தாக்கல் செய்த இம்மசோதா இன்று குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.
வரிவிதிப்பு முறைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.
மின்னணுத் துறையில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரிவிலக்கு ஏற்படுத்துவதற்கான அம்சங்களும் இந்த மசோதாவில் இடம்பெற்றுள்ளது.
இதன்மூலம், அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்க்க முடியும் என்றும், இந்தியாவை உலகளாவிய முதலீட்டு மையமாக உருவாக்க வழிவகை ஏற்படும் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
மக்களவையில் நிறைவேற்றப்பட்ட இம்மசோதா மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.
<<<<<<<>>>>>>
சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நடப்பு நிதியாண்டிற்கான வேளாண் பட்ஜெட், அனைத்து விவசாயிகளின் நலனையும், வாழ்வாதாரத்தையும் மேலும் வலுப்படுத்தும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கால்நடை, மீன்வளர்ப்பு, பால்வளம், உணவுப் பொருட்களை பதப்படுத்துதல் போன்ற தொழில்களை மேம்படுத்தும் வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.
<<<<<<<>>>>>>

தமிழக வேளாண் பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் ஏதும் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குறை கூறியுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக விவசாயிகள் கடந்த மூன்று மாதங்களாக மேகதாது பிரச்சினை, பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்டவையில் ஏமாற்றம் அடைந்திருப்பதாக தெரிவித்தார்.

குறுவை சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருக்கும் எல்லோருக்கும் முழு பயிர்க்கடன் தள்ளுபடி என்ற தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் திரு உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிக்கக் கூடிய பட்ஜெட்டாக இது உள்ளது என்று தெரிவித்தார்.

தவெக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், வேளாண் பட்ஜெட்டில் இதுகுறித்து எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டப்பேரவைத் தேர்தலின்போது விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் இந்த வேளாண் நிதிநிலை அறிக்கையில் எந்த அறிவிப்பும் இடம்பெறவில்லை என்று குறை கூறியுள்ளார்.

வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து அரசு அறிவிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் நிதி ஆதாரத்தை சரி செய்தபின் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று மாநில அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

(Voice – நிர்மல்குமார் - 38 Sec.)

<<<<<<<>>>>>>>

கோவை, தேனி, நெல்லை மாவட்ட மலைப்பகுதிகளின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte – வி ஆர் துரை – 51 Sec.)

தென்காசி மாவட்டம் குற்றால அருவிகளில் நீர்வரத்து குறைந்ததையடுத்து, சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Sound Byte – செந்தில் - 37 Sec.)

இதனிடையே, கபினி அணையிலிருந்து திறக்கப்படும் உபரி நீர் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று மாலை வினாடிக்கு 19 ஆயிரத்து 264 கனஅடியாக அதிகரித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

அரியலூர் மாவட்டம் தா. பழூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆட்சியர் திருமதி மிருணாளினி இன்று ஆய்வு செய்தார்.

திருச்செந்தூர் அருகே தோப்பூர் பகுதியிலுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சியர் திரு விஷ் மகாஜன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

நக்சலைட்டுகளால் உயிரிழந்த திருப்பத்தூரை சேர்ந்த 4 காவலர்களுக்கு 46ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, 30 குண்டுகள் முழங்க அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோவையில் உள்நாட்டு தயாரிப்புகளின் கண்காட்சி மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா வரும் 8-ஆம் தேதிமுதல் 10-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், விவசாய அடையாள எண் பதிவு செய்யும் போது அனைத்து நிலங்கள் குறித்த அனைத்து விவரங்களையும் இணைக்க வேண்டும் என்று ஆட்சியர் திரு மதுபாலன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்ன சேலத்தில் அரசு பள்ளி மாணவர்கள் பங்கேற்ற போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிருஷ்ண பிரசாத் – பிரித்வி கிருஷ்ணமூர்த்தி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-18, 21-19 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் Young Kim – Tae Yang Shin இணையை வென்றது.

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Aryan Sha – Sai Karthik இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-2, 6-4 என்ற செட் கணக்கில், ஸ்பெயின் இணையை வென்றது.

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணி இன்று சேலம் அணியை எதிர்கொள்கிறது.

திண்டுக்கல்லில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் – ரஷ்யாவின் Martin Borisiouk இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<<<<>>>>>>>